tamilisch

**ஒன்றிணைக்கப்பட்ட ஊக்குவிப்பு (IF)**
பெற்றோருக்கான தகவல்கள்

**ஒரே வகுப்பில் ஒன்றாக இருந்து கற்றல்**
ஒன்றிணைக்கப்பட்ட ஊக்குவிப்பானது (IF), ஒரு வகுப்பிலுள்ள பிள்ளைகள், இளைஞர்கள் அனைவருக்கும் ஓர் ஆதரவாகும். வகுப்பாசிரியரும் பிரத்தியேகமாகப் பயிற்றப்பட்ட ஓர் IF- ஆசிரியரும் நெருக்கமாக இணைந்து பணியாற்றுவார்கள். பிள்ளைகளுக்கு வகுப்புடனிணைந்தும், குழுவாகவும், தனியாகவும் கீழ்க்கண்ட விடயங்களுக்காக ஆதரவு வழங்கப்படும்:

- கற்றலில் சிரமம்
- விசேட ஆற்றல்கள்
- நடத்தைப் பிரச்சினைகள்

இரண்டாம் மொழியாக டொய்ச் (DaZ) பாடமானது – உள்ளூராட்சி நிர்வாகங்களுக்கேற்ப – ஒன்றிணைக்கப்பட்ட ஊக்குவிப்பு என்பதன் கீழ் அல்லது தனியான வாய்ப்பாக கற்பிக்கப்படும்.

ஆசிரியர்கள் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை ஓர் ஊக்குவிப்பு உடன்படிக்கையினூடாக ஒழுங்கு செய்வர். அவர்கள் பிள்ளையுடனும் பெற்றோருடனும் பேசுவர். பாடத்திட்டத்திலுள்ள பாட இலக்குகளை, ஒன்றிணைக்கப்பட்ட ஊக்குவிப்பு (IF)- ஆதரவுடன், கற்று முடித்த மாணவர்கள், சாதாரண புள்ளி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவர்.

**தனிப்பட்ட கற்றல் இலக்கும் மதிப்பீடும்**

தீவிர ஆதரவு வழங்கப்பட்டும், பாடத்திட்டத்திலுள்ள நியம இலக்குகளை அடையாத பிள்ளைகளும் இளைஞர்களும் - அவர்களது ஆற்றலுக்கேற்ப, „தனிப்பட்ட கற்றல் இலக்குகளை“ப் பெறுவார்கள். இது சம்பந்தமாக அவர்களுடனும் அவர்களது பெற்றோருடனும் பேசி, ஓர் உடன்பாடு முன்வைக்கப்படும். தேவையேற்படின், பாடசாலை உளவியற்பிரிவும் அழைக்கப்படலாம். இணக்கப்பாடு ஏற்படாத பட்சத்தில், பாடசாலைத் தலைமைத்துவம் முடிவெடுக்கும்.

கற்க வேண்டிய பாடங்களின் அளவு குறைக்கப்பட்டால், பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் புள்ளிகளுக்குப் பதிலாக, அப் பாடத்திற்கு பாட அறிக்கை கொடுக்கப்படும். தேர்ச்சி அறிக்கையில் அப் பாடத்திற்குச் சமூகமளித்ததாக எழுதப்படும். நிர்வாகக் குறிப்புகளில் கீழ்க்கண்டவாறு இருக்கும்: „ஒன்றிணைக்கப்பட்ட ஊக்குவிப்பு; தனிப்பட்ட கற்றல் இலக்குகள்“. பிரத்தியேக ஆற்றலுள்ள, விரிவாக்கப்பட்ட பாடத்திட்டங்களையுடைய பிள்ளைகளுக்கும் சாதாரண புள்ளிகள் வழங்கப்படுவதுடன் ஒரு பாட அறிக்கையும் கொடுக்கப்படும்.

**பெற்றோரும் பாடசாலையும்: இணைந்து பொறுப்பை ஏற்றல்**

- ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு, பெற்றோரின் ஆலோசனை ஒரு முக்கிய அடித்தளமாகும்.
- பெற்றோர், தீர்மானித்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்பதுடன் பாடசாலைக்கும் ஆதரவு வழங்க வேண்டும்.
- பெற்றோர், மதிப்பீடு, சமகாலநிலைமை பற்றிய கலந்துரையாடல்களில் பங்கு கொள்ள வேண்டும். தனிப்பட்ட கற்றல் இலக்குகள் முன்வைக்கப்பட்டவர்களுக்கு, ஒரு வருடத்தில் இரண்டுமுறை இக் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.
- தேவையேற்பட்டால், உங்கள் பிள்ளைக்கு தனிப்பட்ட கற்றல் இலக்குகளை முன்வைப்பது பற்றி, நீங்கள் பாடசாலையுடன் பேசலாம்.
- இணக்கப்பாடு ஏற்படாத பட்சத்தில், பாடசாலைத் தலைமைத்துவத்திடம் விசாரிக்கும்படி கோர, உங்களுக்கு உரிமையுண்டு.

**யார் தகவல் தருவது?**

- கலந்துரையாடக் கூடிய முதலாவது நபர் வகுப்பாசிரியை அல்லது வகுப்பாசிரியர்.
- கற்றல் அல்லது நடத்தை சம்பந்தமான வினாக்களின் போது IF ஆசிரியரும் கலந்துரையாடலுக்கு அழைக்கப்படலாம்.
- பெற்றோருக்கும் ஆசிரியருக்குமிடையில் இணக்கப்பாடு ஏற்படாத பட்சத்தில், பாடசாலைத் தலைமைத்துவம் இதற்குப் பொறுப்பாகும்.

மே 2011